அ.வ.எண்.162/2015
நாள். 16.02.2022
<u>பெயர்– செங்கொட்டுவேல் த/பெ பழனியப்பகவுண்டர்</u>
<u>பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.</u>
<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வழக்கு தொடர்ந்துள்ள கிணறு ஏற்கனவே நான் சாட்சியத்தில் புறமபோக்கில் உள்ளது என்று சொல்லியுள்ளேன். அதன் சர்வே எண் என்ன என்றால் புறம்போக்கு இல்லை பட்டா எண்ணில் உள்ளது. அதன் சர்வே எண்.1/2 பி ஆகும். சபாபதி வழக்கு தொடர்ந்து கிணற்றிற்கு மின் இணைப்பு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதார் என்றால் சரிதான். சபாபதி பெயரில் உள்ள மின் இணைப்பு எண்.188 என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள தாவா கிணற்றின் மின் இணைப்பு எண் என்னவென்றால் தெரியாது. நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் மின் இணைப்பு எண்.97 குறிப்பிட்டுள்ளது என்றால் அது தான பத்திரம் அல்ல கிரையபத்திரம். சர்வே எண். 1/2 பி ஆனது யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது. அந்த சொத்தை சுமார் 60 வருடங்களுக்கு முன்பு என் அப்பா பழனியப்ப கவுண்டர் என் தாத்தா ரங்கசாமியிடமிருந்து வாங்கினார். என் அப்பா ரங்கசாமியிடமிருந்து வாங்கிய கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைதுள்ளேன் என்றால் இல்லை. என் அப்பா சர்வே எண் 1/2 பி-ல் எவ்வளவு நிலம் வாங்கினார் என்றால் 2 ஏக்கர் 65 சென்ட் வாங்கினார். ரங்கசாமியும் வாதி சபாபதியும் செர்ந்து என் அப்பாவிற்கு 1966ம் ஆண்டு 2 ஏக்கர் 60 சென்ட் மட்டுமே விற்றார் என்றால் நினைவில்லை. என் அப்பா ரங்கசாமியிடமிருந்து வாங்கிய கிரையபத்திரம் சான்றிட்ட நகலை வாதி சபாபதி நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார் என்றால் தெரியாது. என் அப்பா கிரையம் வாங்கிய பத்திரத்தில் தாவா கிணற்றில் பாதிபாகம் தான் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. கிணற்றில் மீதி பாதி பாகம் ரங்கசாமி மற்றும் சபாபதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் தவறு. அந்த கிணற்றில் மேற்கு புறம் இரண்டு துளைகள் உள்ளதாகவும் அதில் வடக்கு புறம் உள்ள கவலை தண்ணீர் எடுக்கும் பாத்தியம் என் அப்பாவிற்கும் தெற்கு புறம் உள்ள கவலை தண்ணீர எடுக்கும் பாத்தியம் வாதிக்கும் கொடுக்கப்பட்டது என்றால் தவறு. வா.சா.ஆ.12 கிரைய ஆவணத்தின் படி கிணற்றிற்கு போக வர பாத்தியமும் தண்ணீர் எடுக்கும் பாத்தியம் ரங்கசாமி மற்றும் சபாபதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் தவறு. அவ்வாறு கிணறு பாத்தியம் தண்ணீர் எடுக்கும் பாத்தியம் போகவர பாத்தியம் வாய்க்கால் பத்தியம் வாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளதால்தான் என் அப்பாவின் பெயரில் உள்ள கிரையபத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா கிணற்றில மின் இணைப்பு பெறுவது குறித்து என் அப்பாவிற்கும் வாதிக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் தவறு. அந்த ஒப்பந்தத்தை வா.சா.ஆ.2 ஆக ஒப்படைக்கப்பட்டது. தாவா கிணற்றில் என் அப்பாவிற்கு முதலில் மின் இணைப்பு வந்தால் அதனை வாதி பயன்படுத்தி கொள்ளலாம் என்றும் பின்னிட்டு வாதிக்கு தனியாக மின் இணைப்பு வந்த பிறகு நீக்கி கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் தவறு. என் அப்பா தாவா கிணறு முழுவதற்கும் அவரது பெயரில் மின் இணைப்பு வாங்க முயற்சித்ததால்தான் வாதி இந்நீதிமன்றதில் அசல் வழக்கு எண்.530/1986 ல் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு எங்களுக்கு ஆதவராக தீர்ப்பானது. அந்த வழக்கு நிலுவையில இருக்கும் போது என் தந்தை மின் இணைப்பு எண்.97 பெற்றுக்கொண்டார் என்றால் தெரியாது. அந்த வழக்கில் என் தந்தை சாட்சியம்

அளிக்கும் போது கிணறு மற்றும் மின் இணைப்பில் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் சரிபாதி பாத்தியம் உள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் தவறு. 1ம் பிரதிவாதியான என் தந்தையை இந்த வழக்கில் விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவரை இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் தவறு. அந்த வழக்கில் 20.05.1986 ல் ஏற்பட்ட ஒப்பந்தம் உண்மை என்றும் சபாபதிக்கு தாவா கிணற்றில் சரிபாதி பாத்தியம் என்று தீர்வு கண்டுள்ளார் என்றால் தவறு. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது என் அப்பா மின் இணைப்பு எண்.97 பெற்றுவிட்டதால் சபாபதி தனியாக மின் இணைப்பு பெற்றுக்கொள்ளலாம் என் தெரிவித்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தவறு. அசல் வழக்கு எண்.530/1986 1ம் பிரதிவாதிக்கு சதாகமாக தீர்ப்பானது என்பது தவறு. தாவா கிணற்றிற்கு எந்த திசையில் சபாபதிக்கு நிலம் உள்ளது என்றால் மேற்கு புறம் உள்ளது. அதற்கும் நடுவில் கிணறு உள்ளது. நடுவில் என்றால் எங்கள் நிலத்திற்கு நடுவில். சபாபதிக்கு அவரது நிலத்தில் இருந்து தாவா கிணற்றிற்கு போகவர பாத்தியம் உள்ளதால் தாவா கிணறிற்கு சுற்றிலும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதிக்கு 2 ஏக்கர் 45 சென்ட் நிலம் உள்ளது. அந்த நிலம் வாதிக்கு அவரது தகப்பனார் தானமாக கொடுத்தார். அதன் அடிப்படையில் அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 03.07.1980 தான செட்டிலமெண்ட் பத்திரத்தில் அவரது நிலத்தில் இருந்து போகவர பாத்தியம் மற்றும் வாய்க்கால் பாத்தியம் கொடுக்கபட்டுள்ளதால் அவரது உரிமை மறுக்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா கிணற்றை அபகரிக்க வேண்டி தாவா கிணறு முழுவதற்கும் சேர்ந்து 1ம் பிரதிவாதி மோசடியாக பட்டா பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா கிணற்றில் பட்டா படி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் ஏற்பட்டது என்றாலும் அதில் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் சரிபாதி பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரிலோ அல்லது மற்ற பிரதிவாதிகள் பெயரிலோ பெற்ற பட்டாவானது செல்லாது என்றாலும் வாதியை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. கூட்டாக பட்டா வழங்கியதால் வாதி வட்டாட்சியரிடம் மனு கொடுத்து அதன் பேரில் விசாரணை நடைபெற்றது என்றால் தெரியாது. நில உடைமை மேம்பாட்டு தனி வட்டாசியர் என் அப்பா மற்றும் வாதி ரங்கசாமியை விசாரணை செய்து புல ஆய்வு செய்து என் அப்பாவின் பெயரில் கூட்டாக வாங்கியுள்ள பட்டாவை 02.12.1986ம் தேதியில் உத்திரவு பிறப்பித்து என் அப்பாவின் பெயரை நீக்கி வாதியின் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் தெரியாது. தாவா கிணற்றில் வாதிக்கு உள்ள சரிபாதி பங்கை ஏமாற்ற வேண்டும் என்பதற்றாக தாவா கிணற்றை தன்னுடைய சொத்திற்குள் அடங்கியதாக குறிப்பிட்டு மோசடியாக பட்டா வாங்கியது செல்லாது என்றாலும் வாதியின் பாகத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.530/1986 சபாபதிக்கு தாவா கிணற்றில் உள்ள சரிபாதி பாத்தியம் குறித்து தீர்வு கண்டு அதனடிப்படையில் அவருக்கு மின் இணைப்பு எண்.188 வழக்கப்பட்டுள்ளதால் அவர் மேல்முறையீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் தவறு. சபாபதி தாவா கிணற்றில் அவருக்குள்ள பாத்தியத்தை 2015ம் ஆண்டு வரை அனுபவித்து வந்த நிலையில் 1 முதல் 5 பிரதிவாதிகள் 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கு தனித்தனியாக கிரையம் செய்து கொடுக்கப்பட்டு அதன்பேரில் வீண் இடையூறு செய்வதால்தான் வாதி வழக்கு செய்தார் என்றால் தவறு. உண்மையாக இருந்ததால்தான் கிரையம் செய்து கொடுத்தோம். தாவா கிணறு என் அப்பாவிற்கு சுயமாக பாத்தியப்பட்டது என்பதும் தாவா கிணறு முழுவதும் பட்டா எண்.238-ன்படி பாத்தியம் என்பதும் அதனடிப்படையில் ஏற்பட்ட பட்டா வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ஏக்கர் 2.60 சென்ட் நிலத்திற்கு

மட்டும் உட்பிரிவவு செய்து தனிப்பட்டா பெற்றிருக்க வேண்டும் என்பதும் அதேபோல் கிணற்றில் தனியாக உட்பிரிவு செய்து வாதி மற்றும் 1ம் பிரதிவாதி பெயருக்கு கூட்டுப்பட்டா பெற்றிருக்க வேண்டும் என்பதற்கும் அதனால் மொத்தம் 2.65 ஏக்கர் நிலத்திற்கும் 1ம் பிரதிவாதி பட்டா பெற்றிருப்பது என்றால் சரியல்ல. வாதி தாவா கிணற்றை உட்பிரிவு செய்து வாதி பெயருக்கு கூட்டுப்பாட்டா வழங்க வேண்டும் என்பதற்காக நடவடிக்கை எடுத்து 1முதல் 10 பிரதிவாதிகள் தடை செய்ததால்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தவறு. பட்டா உரிமை மூலம் ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. தாவா கிணற்றில் வாதி சேஞ்ச் ஓவர் வைத்து இன்றளவும் தண்ணீர் பாய்ச்சி வருவதால் தாவா கிணறு நீண்ட கால அனுபவப்படி பிரதிவாதிகளுக்கு பாத்தியம் கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதிக்கு 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் கிரைய பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது. எந்த நிலம் என்றால் மற்றொரு நிலம் ஆகும். அதன் சர்வே எண் தெரியாது. பி.வா.சா.ஆ.1. நான் மற்றும் என் தந்தை மற்றும் சகோதர சகோதரிகள் 09.10.2015ம் தேதியில் பி.வா.சா.ஆ.1முதல் 5 கிரைய ஆவணத்தின் படி 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கு கிரையபத்திரம் எழுதிக்கொடுத்தோம். அதில் தாவா கிணறு காண்பித்து கிரைய பத்திரம் செய்தோம் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்திரங்களில் 1ம் பிரதிவாதிக்கு தாவா கிணற்றில் முழு உரிமை உள்ளதாக காண்பித்து ஏற்படுத்தப்பட்டது என்றாலும் அந்த ஆவணம் செல்லாது என்றாலும் வாதியை கட்டுப்படுத்தாது என்றாலும் சரயில்ல. பி.வா.சா.ஆ.8 2016ம் ஆண்டு தாவா கிணறு சர்வே எண்.1/2பி3 உட்பிரிவு செய்யப்பட்டு 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சிட்டா தாவா கிணற்றில் வாதிக்கு உள்ள உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 9, 10 தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டது அல்ல என்றாலும் செல்லாது என்றாலும் சரியல்ல. தாவா கிணற்றில் 1ம் பிரதிவாதிக்கு அரை பங்கு பாத்தியம் மட்டுமே உள்ள நிலையில் முழு பங்கு உள்ளது போல் குறிப்பிட்டு 6 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணங்களான வாதியின் அரை பங்கு பாகத்தை பொறுத்து மட்டும் செல்லாது என்றால் சரியல்ல. சபாபதி எந்தவிதமான மோசடி ஆவணம் செய்யவில்லை என்றும் 1 முதல் 10 பிரதிவாதிகள் ஆகிய நாங்கள்தான் மோசடி ஆவணம் தயார் செய்து வாதிக்கு இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து பத்து லட்சும் என்று கூறியுள்ளேன் அதற்கு நீதிமன்றதில் ஆவணம் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி நீதிமன்றத்திற்கு சரியான மதிப்பீடு செய்து நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளதால் இவ்வழக்கு செல்லக்கூடிய வழக்கு என்றால் சரியல்ல. இவ்வழக்கை நடத்துவதற்கு இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 முதல் 5 ஆவணங்களில் வாதியின் பாகத்தை சேர்த்து எழுதப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணங்கள் செல்லாது என முறையாக விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு செல்லக்கூடிய வழக்கு என்றால் சரியல்ல. எனது வாக்குமூலத்தில் தாவா சொத்திற்கும் வடக்கில் 2 இடத்தில் வாதிக்கு நிலம் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரயில்ல. கிழக்கில் மற்றும் மேற்கில் உள்ளது. என்னுடைய சாட்சியத்தில் தாவா கிணற்றில் வடக்கில் வாதிக்கு நிலம் உள்ளதாக தெரிவித்து விட்டு தற்போது தாவா கிணற்றை சுற்றியும் எங்களுக்கு நிலம் உள்ளதாக பொய் வழக்கு ஆடிவருகிறேன் என்றால் சரயில்ல. எனது வாக்குமூலத்தில் தாவா கிணற்றில் வடக்கில் வாதிக்கு பாத்தியப்பட்ட 30 சென்ட் நிலத்தையும் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரயில்ல. 1980 தானசெட்டில்மெண்ட் படி வாதி ஏக்கர் 2.40 சென்ட் நிலத்தையும் அதற்கு தாவா கிணற்றையும் அனுபவித்து வந்தோம்

என்றாலும் தாவா கிணற்றில் அவருக்குள்ள பாத்தியத்தை உரிமையுடன் அனுபவித்து வருகிறார் அதனை தடுப்படுதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்கில் மற்றும் வாக்குமூலத்தில் மிண் இணைப்பு எண்.97 என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி சபாபதி மகள் மற்றும் மகனை அடித்த வழக்கில் நான் பெயிலில் வந்தேன் என்றால் சரிதான். சபாபதிக்கு பாத்தியப்பட்ட கிணற்றை நான் அபகரிக்க வேண்டி வாதிக்கு வீண் இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதிக்கு தாவாவில் கோரியவாறு அனைத்து பரிகாரமும் செலவுத்தொகையுடன் கிடைக்க வேண்டும என்றால் சரயில்ல.